1990 மார்ச் 19]

பேச்சிப்பாறையில் சிறிய நீர்மின் திட்டம் அமைத்தல்

*353—திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் சிறிய நீர் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் சிறிய நீர் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

வைகை நதியின் குறுக்கே கால்வாய் திட்டம்

*741—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

உசிலம்பட்டி தாலுக்காவில், வைகை நதியின் குறுக்கே விருவேட்டிலிருந்து உத்தப்பநாயக்கனூர் வழியாக வரும் கால்வாய் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. என். வல்லரசு: பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் 58 கிராமங்கள் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு 6 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி வந்தும், இந்த ஆண்டு 900 ஏக்கர்களுக்கு மட்டுமே நீர்ப்பாசன வசதி அளித்து, பெரியார் வைகை நீர்ப்பாசனப் பொறியாளர்கள் அரசுக்குத் திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனால் எனது தொகுதி மக்கள் மிகவும் வேதனையில் உள்ளனர். எனவே, அடிப்படை கோரிக்கையான 6 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினருக்குத் தவறான தகவல் தரப்புட்டிருக்கிறது. பெரியகால்வாயிலிருந்து, 21 கிலோ மீட்டர் நீள கால்வாய் அமைக்கும் பணிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசு 6 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர்ப்பாசன வசதிஅளிக்க திட்டம் ஒன்றைத் தயாரித்து கொண்டிருக்கிறது. அவற்றுக்குப் பின் பிக்அப் அணைக்கட்டி லிருந்து தண்ணீர் எடுத்து வருவதற்கு முடியுமா என்பதைப் பொறியாளர்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். அறிக்கையை

அரசினுடைய பரிசீலனைக்கு விரைவில் அனுப்ப இருக்கிறார்கள். அது வந்தபிறகுதான் முடிவு தெரியும்.

திரு. பி. என். வல்லரசு: தலைவர் அவர்களே, அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா அல்லது அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முடியாது அரசின் ஆய்வு அறிக்கை வர வேண்டும். பிறகு அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். நிதிநிலைக் கேற்ப அவை பின்னால் மேற்கொள்ளப்படலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலே தண்ணீர் கொண்டு போவதிலே—விருவேட்டிலிருந்து என்றிருக்கிறது விருவேடு என் தொகுதி. இந்தத் தண்ணீர் வைகை பெரியார் அணைக்கட்டி லிருந்து வரும்போது, இரண்டு பக்கங்களிலுள்ள நிலங்களை யெல்லாம் சேர்த்து இணைத்து 6 ஆயிரம் ஏக்கரா? இல்லை தனியாக உசிலம்பட்டிக்கு மட்டும் 6 ஆயிரம் ஏக்கரா? என்பதைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அம்மை யார் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை படிக்கிறபோது இங்கே இருந்தார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்று கேட்டால் அதிலே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் நவீனப்படுத்துவதற்கு இரண்டு கட்டமாக செய்து கொண்டிருக்கிறார்கள் உலக வங்கி உதவியுடன், இரண்டாவது கட்டப் பணி, 31.4.1991-க்கு முடிய வேண்டும். ஆனால் இந்த இரண்டாவது கட்டப்பணியிலே கொஞ்சம் பணம் நமக்கு மிச்சம் இருக்கிறது. சுமார் 16.85 கோடி ரூபாய். அதை பாசனப் பகுதிக்கே பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, பயன்படுத்த வேண்டுமென்று அரசு நினைத்து வைகை அணையிலிருந்து நேராக ஒரு கால்வாயை பேரணை ரெகுலேட்டருக்கு வெட்டுவதற்கு முடி வெடுத்திருக்கிறோம். அந்தக் கால்வாய் வெட்டப்படுமானால் பெரியகுளத்திற்கும், நிலக்கோட்டை தொகுதிக்கும் கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறப்படுகிறது. பெரியார் பிரதான கால்வாயிலிருந்து மணல்படிவத்தைத் தடுப்பதற்கு இது உதவுகிறது. ஆக இவ்வளவும் உங்களுடைய தொகுதியிலேதான் அதிகமானப் பகுதி பயன் பெறப்போகிறது என்கிற விவரத்தை அம்மையார் அவர்கள் அறிவார்கள். எங்கே அதை எப்படிச் செய்ய வேண்டுமென்ற கடிதக் குறிப்பும் என்னிடத்திலே இருக்கிறது.

பம்பிங் ஸ்டேஷனுக்கு நேரடி மின் இணைப்பு

* 2116—திரு. பொ. முருகேசன்: மாண்புமிகு பொதுப்பணித் **துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:**